சாது சங்கம்.

நோக்கங்களும்
விதிகளும்.

சாது சங்கம்.

SADHU SANGAM.

(Registered under the Societies Registration Act XXI cf 1860)

No. S. 14 of 1950.

5-b

Certificate of Registration of Societies'

ACT XXI OF 1860

No. S. 14 of 1950.

I hereby certify that the "Sadhu Sangam" has this day been registered under the Societies' Registration Act, 1860, (No. XXI of 1860).

Given under my hand at Madhurai this Fourteenth day of September, one thousand nine hundred and fifty.

SEAL

(Sd.) S. S. Sankara Ayyar,
Assistant Registrar of Joint Stock Companies,
Ramanathapuram.

14-9-'50

(True Copy)

சிவமயம்.

ஸ்ரீமத் எஸ். நீலகண்ட சுவாமிகள்

இயற்றியது.

நேரிசை வெண்பா.

ஆண்டுவிரோ தித்திங்கள் ஆர்தைபத் தாந்திகதி
ஈண்டியநற் சாதுசங்க மோரூர்—வேண்டியவா
நாடோறு மோங்கியுயர் நம்பனரு ளானன்றாய்
நீடூழி வாழ்கஇவ ணின்று.

சிதம்பரம்,

ஸ்ரீ மௌந ஸ்வாமிகள் மடம், மடாதிபதி,

ஸ்ரீமத் சபாபதிச் சுவாமிகள்

இயற்றியது.

நேரிசை வெண்பா.

மன்னும் விரோதி மதிமகர நாள்பத்திற்
பன்னு மதிவார பஞ்சமியில்—மன்னியசீர்ச்
சாதுசங்க மாரூரிற் சால்புறத்தோன் றிற்றுலகின்
மேதகவே வாழ்க மிளிர்ந்து.

ஏகாம்பரக் குப்பம் பேட்டை,

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி மடம், மடாதிபதி,

ஸ்ரீமத் மகா, கோவிந்த சுவாமிகள்

இயற்றியது.

நேரிசை வெண்பா.

சத்தியஞா னனந்தஞ் சார்விக்குஞ் சாதுசங்கம்
நித்தியமா யோங்கிடவே நீக்கமிலாக்—கத்தனுஞ்
சித்திவி நாயகனே சீருளேச் செய்புடனே
எத்திசையு மின்புறவே ஈண்டு.

கொரடாச்சேரி,

ஸ்ரீமத் கோ. வ. சாமிநாத சுவாமிகள்

இயற்றியது.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

(1) திருவளர் கமலை நகர்மடப் புரத்திற்
சிறப்பமர் கோயில்கொண் டருளித்,
தருவென நினைக்குந் தம்மடி யவர்க்குத்
தண்ணருள் சுரந்திடு குருவாம்,
பொருவரும் புகழார் தக்ஷிணா மூர்த்திப்
புண்ணிய சிலவுன் மடத்திற்,
கருவளர் துன்ப மகற்றிடற் கேற்ற
கண்ணுதற் பெரும! நின் னருளால்,

(2) நற்றமிழ் நாட்டு நற்றவத் துறவோர்
நாட்டினுக் குறுதுயர் களைவான்,
பெற்றபே றுலகம் பெறவெனக் கருதிப்
பெருங்கரு ணைத்திற மதனால்,
உற்றது கொடுக்கும் விரோதிதைத் திங்கள்
ஒன்றுட னென்பதாம் நாளில்,
அற்றமில் சாது சங்கமொன் றமைத்தா
ரஃதுநீ டூழிவா ழியரோ.

கோவிலூர்,

ஸ்ரீமத் சோமசுந்தர ஐயா அவர்கள்

இயற்றியது.

இருபத்துநான்கு சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பொன்கொண்ட விதழிமலர் கங்கைபிறை யணிமுடிப்
புற்றிட மெழுந்தபரனும்
புனிதகம லாம்பிகையு மினிதுகம லாலயப்
பூங்கோயில் கொண்டபதியாம்

பொருதிரை கரிக்கொம்பு மணியகில் கொழித்துவரு
பொன்னிநதி நீர்வளஞ்சால்

பொங்கர்வயல் சூழ்ந்ததிரு வாரூர் மடப்புரம்
பொலிவுறு மடாலயத்தே,

மன்கொண்ட கலிவருட மையா யிரத்தின்மேன்
மருவுமைம் பத்தொன்றினில்

வைகிய விரோதியாண் டெய்துத்த ராயணமுண்
மகரமதி திகதிபத்தில்

வளர்பூர்வ பக்கமுள பஞ்சமித் திதிசேர்ந்து
வருசோம வாரதினமாம்

வானவரு மெதிர்பார்க்கு மங்கள நிறைந்துமிக
வந்தசுப காலமதனில்,

மின்கொண்ட பாண்டிவள மண்டலக் கோயிலூர்
மேவியொளிர் ஞானராசன்

மேதகு திருமுத்து ராமலிங் கக்குரவன்
மெய்ம்மரபின் வந்தவடியார்

மேலாய தென்மொழியும் வடமொழியு நன்றாக
விரிவுற வுணர்ந்தபெரியோர்

வேதாந்த நியாயவை சேடிய வியாகரண
வேத்தியத் திறவர்குழுமித்,

தென்கொண்ட ஞாலமிசை மன்பதை திருந்தவுஞ்
சீரடியர் ஞானமுறவுஞ்

திருவருட் டுணைகொண்டு நிருமித்த வத்துவித
சித்தாந்த சாதுசங்கம்

சீலமுட னென்றென்று நீடுழி வாழவே
தெள்ளமுத வருள்பொழிவனாற்

செப்புமுன் மடத்துள்வளர் தெக்ஷிணா மூர்த்தியாந்
தெய்வீக ஞானகுருவே.

சாது சங்கம்.

யாதாஸ்து.

1. பெயர் :—

இந்தச் சங்கமானது "சாது சங்கம்" என்ற பெயரால் வழங்கப்பெறும்.

2. நோக்கங்கள் :—

(அ) சாதுக்களிடையே ஒற்றுமை நிலவச் செய்தல்.

(ஆ) சமுதாயத்தில் சாதுக்களுக்குப் பூர்வீகமாக ஏற்பட்டுள்ள கௌரவமான ஸ்தானத்தை அடையத் தக்க பிரயத்தனங்களைச் செய்தல்.

(இ) சாதுக்களால் நிருவகிக்கப்பெறும் சமாதி அதிஷ்டானங்களில், அவரவர் உரிமைகளை ஸ்தாபித்துக்கொள்ளச் சட்டரீதியான உதவிகளைச் செய்தல்.

(ஈ) சாதுக்களின் நலன் கருதியும், இதர ஜன சமூகத்தின் நலன் கருதியும் பாரமார்த்திகத் துறைகளிலும், இலௌகிகத் துறைகளிலும், சமாச்சார, புத்தக வெளியீடுகள், துண்டுப் பிரசுரங்கள், உபந்யாசங்கள் வாயிலாகப் பணி செய்தல்.

(உ) இச் சங்கமானது அரசியல் துறையிலும், மத வியவகாரங்களிலும், சமாதி அதிஷ்டானங்களின் அதிகார உரிமைகளிலும் கலந்து கொள்ளாது.

3. நிர்வாகக் கவுன்ஸில் :—

தலைவர்.

(1) ஸ்ரீலஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள்,
ஸ்ரீ வீரசேகர ஞாந தேசிக ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்,
ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள் மடம்,
திருப்பூவணம்,
(இராமநாதபுரம் ஜில்லா).

செயலாளர்.

(2) ஸ்ரீ இராமநாத ஸ்வாமிகள்,
ஸ்ரீ நடேச ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்,
ஈசான்ய மடம், திருவண்ணுமலை.
(வடஆற்காடு ஜில்லா).

பொருளாளர்.

(3) ஸ்ரீ வீர சு. ஷண்முகானந்த ஸ்வாமிகள்,
ஸ்ரீ வீர சுப்பைய ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்,
ஸ்ரீ குரு தக்ஷிணுமூர்த்தி ஸ்வாமிகள் மடம்,
மடப்புரம், திருவாரூர்,
(தஞ்சாவூர் ஜில்லா).

நிர்வாகஸ்தர் அங்கத்தினர்கள்.

(4) ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞாநதேசிக ஸ்வாமிகள்,
ஸ்ரீ அண்ணுமலை ஞாநதேசிக ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்,
கோவிலூர் மடாலயம், காரைக்குடி போஸ்ட்,
(இராமநாதபுரம் ஜில்லா).

(5) ஸ்ரீ அருணாசல ஸ்வாமிகள்,
ஸ்ரீ நடேச ஸ்வாமிகள் மாணாக்கர்,
சந்நியாச ஆச்ரமம்,
ஸ்ரீ குட்டைய ஸ்வாமிகள் மடம்,
தெற்குவெளி வீதி, மதுரை,
(மதுரை ஜில்லா).

(6) ஸ்ரீ வீர சு. அநந்தானந்த ஸ்வாமிகள்,
ஸ்ரீ வீர சுப்பைய ஸ்வாமிகள் மாணாக்கர்,
சந்நியாச ஆச்ரமம்,
ஸ்ரீ வீர சுப்பைய ஸ்வாமிகள் மடம்,
9. பெரம்பூர் பாரெக்ஸ் ரோடு, வேப்பேரி போஸ்ட்,
சென்னை 7.

(7) ஸ்ரீ கிருஷ்ணானந்த ஸ்வாமிகள்,
ஸ்ரீ மஹாதேவ ஞாந தேசிக ஸ்வாமிகள் மாணாக்கர்,
சந்நியாச ஆச்ரமம்,
கோ. ஆ. மடம், திருக்களர். P.O.
(தஞ்சாவூர் ஜில்லா).

(8) ஸ்ரீ வேலாயுத ஸ்வாமிகள்,
ஸ்ரீ மஹாதேவ ஞாந தேசிக ஸ்வாமிகள் மாணாக்கர்,
சந்நியாச ஆச்ரமம்,
பவழக்குன்று மடம், திருவண்ணாமலை,
(வட ஆற்காடு ஜில்லா).

(9) ஸ்ரீ சபாபதி ஸ்வாமிகள்,
ஸ்ரீ செல்லப்ப ஸ்வாமிகள் மாணாக்கர்,
சந்நியாச ஆச்ரமம்,
ஸ்ரீ மௌந ஸ்வாமிகள் மடம், சிதம்பரம்,
(தென்னாற்காடு ஜில்லா).

(10) ஸ்ரீ சிந்மயானந்த ஸ்வாமிகள்,
ஸ்ரீ சோமசுந்தர ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்,
ஸ்ரீ பிரஹ்மாநந்த ஸ்வாமிகள் மடம்,
தெற்கு வாசல், மதுரை,
(மதுரை ஜில்லா).

(11) ஸ்ரீ ந. இராமானந்த ஸ்வாமிகள்,
ஸ்ரீ நடேச ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்,
ஸ்ரீ சபாபதி ஸ்வாமிகள் மடம்,
மேட்டுப்பாளையம், கலசபாக்கம் போஸ்ட்,
(வட ஆற்காடு ஜில்லா).

கீழே கையொப்ப மிட்டிருக்கும் நாங்கள், இந்தச் சங்கத்தை, 21 of 1860 சொஸைட்டி ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டுப்படி, ஒரு சங்கமாக ரிஜிஸ்டர் செய்துகொள்ள விரும்புகிறோம்.

தலைவர்.

(1) காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள்,
ஸ்ரீ வீரசேகர ஞாநதேசிக ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்.

செயலாளர்.

(2) இராமநாத ஸ்வாமிகள்,
ஸ்ரீ நடேச ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்.

பொருளாளர்.

(3) வீர சு. ஷண்முகானந்த ஸ்வாமிகள்,
ஸ்ரீ வீர சுப்பைய ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்.

நிர்வாகஸ்தர் அங்கத்தினர்கள்.

(4) சோமசுந்தர ஞாந தேசிகர்,
ஸ்ரீ அண்ணுமலை ஞானதேசிக ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்.

(5) அருணுசல ஸ்வாமிகள்,
ஸ்ரீ நடேச ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்.

(6) வீர சு. அநந்தானந்த ஸ்வாமிகள்,
ஸ்ரீ வீர சுப்பைய ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்.

(7) ம. கிருஷ்ணுனந்த ஸ்வாமிகள்,
ஸ்ரீ மஹாதேவ ஞானதேசிக ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்.

(8) வேலாயுத ஸ்வாமிகள்,
ஸ்ரீ மஹாதேவ ஞானதேசிக ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்.

(9) சபாபதிச் சுவாமிகள்,
ஸ்ரீ செல்லப்ப ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்.

(10) சிந்மயானந்த ஸ்வாமிகள்,
ஸ்ரீ வீர சோமசுந்தர ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்.

(11) ந. ராமானந்த ஸ்வாமிகள்,
ஸ்ரீ நடேச ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்.

சாக்ஷி, நாராயண ஸ்வாமி
குட்டையா மடம், மதுரை. (14-9-'50)

சாது சங்கம்.

விதிகள்.

1. இருக்குமிடம் :—

இச் சங்கத்திற்கெனத் தனியாக (நிரந்தரமாக) ஒரு கட்டிடம் ஏற்பாடு செய்யப்பெறும் வரையில், நிர்வாகக் கவுன்ஸிலின் அபிப்பிராயத்திற்கும், சௌகரியத்திற்கும் ஏற்ப, அவ்வப்போது தலைமை ஸ்தானம் மாற்றி அமைக்கப் பெறும்.

தற்காலம் "சாது சங்கம்" திருப்பூவணமடம், திருப்பூவணம் (S.I.R.) இராமநாதபுரம் ஜில்லா, என்ற விலாசத்தில் இருந்து வரும்.

2. அங்கத்தினர்களும், அவர்களின் தகுதிகளும் :—

துவராடையேனும், வெள்ளாடையேனும் அணிந்தவராயும், சந்நியாச ஆச்ரமத்துக்குரிய சின்னங்கள் உடையவராயும், சகுணப்ரஹ்ம, நிர்க்குணப்ரஹ்ம பக்தி யுடையவராயும், கால தேச வர்த்தமானத்துக்குத் தகுந்த ஆசார சீலராயும் உள்ள ஆண்பாலர், பெண்பாலர் என்னும் இரு பிரிவினர்களும் அங்கத்தினர் ஆகலாம்.

3. அங்கத்தினர்களின் கடமைகள் :—

இச் சங்கத்தின் நோக்கங்களுக்கும், விதிகளுக்கும், அவ்வப்போது செய்யப்பெறும் மாறுதல்களுக்கும், திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும்.

4. அங்கத்தினர்களின் உரிமைகள் :—

அங்கத்தினர்கள், பிரதி வருஷமும் நடைபெறும் மஹாசபைக் கூட்டங்களிலும், விசேஷ மஹாசபைக் கூட்டங்களிலும் கலந்துகொள்ளவும், தீர்மானங்கள் கொண்டு வரவும், ஆராய்வுக்குக் கொண்டுவரப்பெற்ற தீர்மானங்களின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கவும், வாக்குக்கொடுக்கவும் உரிமையுண்டு.

5. அங்கத்தினர்களைச் சீர்திருத்தல் :—

அங்கத்தினர்களில் எவரேனும் சங்கத்தின் தகுதிக்கு, அல்லது நோக்கங்களுக்கு இடையூறாக விருப்பதாகவோ, சங்கத்தின் விதிகளை மீறி நடப்பதாகவோ நிர்வாக சபையார் கருதினால், மஹாசபைக் கூட்டத்தில் அறிவித்து மஹாசபையின் மூலமாகச் சாத்வீகமான முறையில் அவ்வங்கத்தினரைத் திருந்தும்படி செய்தல் வேண்டும்.

6. அங்கத்தினர் வகை :—

இச் சங்கமானது (1) நிர்வாகஸ்தர், (2) போஷகர், (3) ஆலோசகர், (4) விசேஷ அங்கத்தினர், (5) அபிமானிகள் என ஐந்து பிரிவுகள் கொண்டதாய் இருக்கும்.

(அ) நிர்வாகஸ்தர்.

மூலதனமாக (ரூ. 501) ரூபாய் ஐநூற்று ஒன்று செலுத்தும் சாதுக்களைத் தலைவராகக்கொண்ட ஸ்தாபனங்கள் இந்தப் பிரிவிற் சேரும்.

(ஆ) போஷகர்.

மூலதனமாக (ரூ. 351) ரூபாய் முந்நூற்று ஐம்பத்து ஒன்று செலுத்தும் சாதுக்களைத் தலைவராகக் கொண்ட ஸ்தாபனங்கள் இந்தப் பிரிவிற் சேரும்.

(இ) ஆலோசகர்.

மூலதனமாக (ரூ. 201) ரூபாய் இருநூற்று ஒன்று செலுத்தும் சாதுக்களைத் தலைவராகக் கொண்ட ஸ்தாபனங்கள் இந்தப் பிரிவிற் சேரும்.

(ஈ) விசேஷ அங்கத்தினர்.

வருஷம் ஒன்றுக்கு (ரூ. 12) ரூபாய் பன்னிரண்டு வீதம் செலுத்தும் சாதுக்கள் இந்தப் பிரிவிற் சேர்வர்.

(உ) அபிமானிகள்.

இச் சங்கத்திற்கு நன்கொடை யளிப்பவர்கள் இந்தப் பிரிவிற் சேர்வர்.

7. நிர்வாகக் கவுன்ஸில் :—

இந்தக் கவுன்ஸில், நிர்வாகஸ்தர் அங்கத்தினர்களான எல்லா 16 ஸ்தாபனங்களின் தலைவர்களைக் கொண்டு அமையும். தற்காலம் 11 ஸ்தாபனங்களின் தலைவர்களைக் கொண்டு அமைந்திருக்கிறது.

இந்தக் கவுன்ஸில் முக்கிய சந்தர்ப்பங்களில் கூடி, அவசர விஷயங்களைக் கவனித்து ஆவன செய்யும்.

இந்தக் கவுன்ஸில் கூட்டங்களுக்கு மூன்றில் ஒரு பங்கு, அல்லது குறைந்த பக்ஷம் 4 அங்கத்தினர்கள் வந்திருந்தால் கோர (Quorum) மாகக் கருதப்படும்.

8. காரியக் கமிட்டி :—

இந்தக் கமிட்டியானது, தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட நிர்வாகஸ்தர், போஷகர் ஆகிய இரு பிரிவுகளிலும் உள்ள அங்கத்தினர்களான எல்லா ஸ்தாபனங்களின் தலைவர்களைக் கொண்டு அமையும்.

இந்தக் கமிட்டி வருஷத்துக்கு ஒருமுறை, அவஸ்ய மானல் மேலும் கூடி, முன் நடைபெற்ற காரியங்களையும், இனிமேல் நடக்கவேண்டிய காரியங்களையும் ஆராய்ந்து, நிர்வாகக் கவுன்ஸிலுக்கு உதவி செய்யும். இந்தக் கமிட்டிக் கூட்டங்களுக்கு மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் வந்திருந்தால் கோர (Quorum) மாகக் கருதப்படும்.

9. ஆலோசனைக் கவுன்ஸில்:—

(அ) இந்தக் கவுன்ஸில், நிர்வாகஸ்தர், போஷகர், ஆலோசகர் ஆகிய மூன்று பிரிவுகளிலும் உள்ள அங்கத்தினர்களான எல்லா ஸ்தாபனங்களின் தலைவர்களைக்கொண்டு அமையும்.

(ஆ) இந்தக் கவுன்ஸில் வருஷத்துக்கு ஒருமுறை கூடி, முன் நடைபெற்ற காரியங்களையும், மேல் நடக்க வேண்டிய காரியங்களையும் பரிசீலனை செய்து, நிர்வாகக் கவுன்ஸிலுக்கு ஆலோசனை கூறும்.

(இ) நிர்வாகக் கவுன்ஸில் சமர்ப்பிக்கும் வருஷாந்தர பட்ஜெட்டை ஆராய்ந்து சாங்ஷன் செய்யும்.

(ஈ) நிர்வாகக் கவுன்ஸில் சமர்ப்பிக்கும் வரவு, செலவு கணக்குகளைப் பரிசீலனை செய்து அங்கீகாரம் செய்யும்.

(உ) இந்தக் கவுன்ஸில் கூட்டங்களுக்கு, மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் வந்திருந்தால் கோர (Quorum) மாகக் கருதப்படும்.

10. மஹா சபை :—

இந்தச் சபை, நிர்வாகஸ்தர், போஷகர், ஆலோசகர், விசேஷ அங்கத்தினர் ஆகிய நான்கு பிரிவுகளைச் சேர்ந்த அங்கத்தினர்களால் அமையும். இந்தச் சபை, வருஷம் ஒரு முறை கூடிச் சங்கத்தின் பொதுப்படையான ஆக்க வேலைகளில் ஆலோசனை கூறுவதுடன், வேண்டிய உதவிகளையும் செய்யும்.

இந்தச் சபையின் கூட்டங்களுக்கு, மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் வந்திருந்தால் கோரா (Quorum) மாகக் கருதப்படும்.

11. நிர்வாகம் :—

இச் சங்கமானது, ஒரு தலைவர், ஒரு செயலாளர், ஒரு பொருளாளர் ஆகிய மூவரைக் கொண்டு இயங்கும்.

12. நிர்வாகிகள் தேர்தல் :—

ஆலோசனைக் கவுன்ஸிலானது, மூன்று வருடத்திற்கு ஒரு முறை, நிர்வாகஸ்தர் அங்கத்தினர்களில் தகுதியுடைய ஒருவரைத், தலைவராகத் தேர்தல் செய்யும். அதே விதமாகச் செயலாளரையும், பொருளாளரையும் மூன்று வருடத்திற்கு ஒரு முறை தேர்தல் செய்யும். இதில் பெரும்பான்மையோரின் அபிப்பிராயமே ஏற்றுக்கொள்ளப் பெறும்.

13. அங்கத்தினர் ஓட்டு உரிமை :—

சங்கத்தின் கூட்டங்களில் ஆஜராகியுள்ள அங்கத்தினர்கள் மட்டுமே கூட்டங்களில் ஓட்டுச் செய்யலாம்.

14. தலைவர் செயல்:—

(அ) இச் சங்கத்தின் மஹாசபை முதலிய சகல கூட்டங்களிலும் தலைமை தாங்குதல்.

(ஆ) கூட்டங்களை நிருவகித்துப் பக்ஷபாத மின்றி நடத்துதல்.

(இ) கூட்டங்களில் ஆலோசனைக்கு வரும் விஷயங்களில், விவாதங்கள் முதலியன நேர்மையுடன் நடைபெறச் செய்தல்.

(ஈ) கூட்டங்களில் உபந்யாசகர்களையும், விஷயங்களையும் தேர்ந்தெடுத்தல் முதலியன.

15. செயலாளர் செயல்:—

(அ) இச் சங்கத்தின் வரவு, செலவு கணக்குகளைச் சரியாக வைத்துக்கொள்ளுதல்.

(ஆ) சங்க சம்பந்தமான கடிதப் போக்குவரத்துகளைக் கவனித்தல்.

(இ) மூலதனம், சந்தா முதலியன வசூல் செய்தல்.

(ஈ) கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல்.

(உ) அழைப்பு முதலியன அனுப்புதல்.

(ஊ) சங்கத்தின் சகல காரியங்களையும் முறையாக நடைபெறச் செய்தல்.

(எ) ரூபாய் பத்துக்குள் அவஸ்யமான செலவுகளைச் செய்துகொள்ளல்.

(ஏ) ரூபாய் பத்துக்கு மேல் இருபத்தைந்துக்குள், தலைவர் அநுமதி பெற்றுச் செலவு செய்தல்.

(ஐ) ரூபாய் இருபத்தைந்துக்கு மேல் ரூபாய் நூறு வரை, காரியக் கமிட்டியின் அநுமதியின் பேரில், பொக்கிஷதாரிடம் பணம் பெற்றுச் செலவு செய்தல்.

(ஒ) ரூபாய் இருபத்தைந்து வரை இருப்பு வைத்துக் கொள்ளல்.

(ஓ) ரூபாய் இருபத்தைந்துக்கு மேற்பட்ட தொகையை அவ்வப்போது பொக்கிஷதாரிடம் கொடுத்து, அதற்கு வவுச்சர் பெற்றுக்கொள்ளல்.

(ஔ) மஹாசபை முதலிய சகல கூட்டங்களிலும், நடைபெறும் சகல நடவடிக்கைகளையும், தீர்மானங்களையும் தனிப் புத்தகத்தில் எழுதி, அதில், கூட்டத்திற்குத் தலைமை தாங்குபவர், கலந்துகொள்ளும் அங்கத்தினர்கள் ஆகியோரின் கையொப்பம் பெறுதல்.

16. பொருளாளர் செயல் :—

(அ) சங்கத்தின் நிதியையும், இதர மதிப்புள்ள வஸ்துக்களையும் பாதுகாத்து வருதல்.

(ஆ) சங்கத்தின் நிதியைக், காரியக் கமிட்டியின் தீர் மானப்படி, பேங்குகளில் "சாது சங்கத்தின்" பெயரால் போட்டுவைத்து, அவ்வப்போது வேண்டிய தொகைக்குத் தலைவரும், செயலாள ரும் கையெழுத்திட்ட வவுச்சரின் பிரகாரம், செக் மூலம், பேங்கில் பணம் பெற்றுக் கொடுத்தல்.

(இ) சங்கத்தின் நிதி சம்பந்தமான கணக்கு வைத்துக் கொள்ளுதல்.

17. மூலதனம் :—

சங்கத்தின் மூல தனத்திலிருந்து எந்தவிதமான செலவும் செய்ய யாருக்கும் அதிகாரமில்லை.

18. வரவு செலவு பட்ஜெட் :—

சங்கத்தின் மூலதனத்திலிருந்து கிடைக்கும் வட்டிப் பணத்தையும், இதர வருமானங்களையும் கொண்டு, வருஷா வருஷம் நடைபெறும் மஹாசபைக் கூட்டத்தில், பட்ஜெட் சாங்ஷன் செய்யப்பெறும்.

19. ஸ்தாவர சொத்து ஆர்ஜிதம் :—

போதுமான மூலதனம் சேர்ந்ததும், அந்தப் பணத்தைக்கொண்டு காரியக் கமிட்டியின் அங்கீகாரத்தின் பேரில், நிலையான கட்டிடம் வாங்கி வைக்கப்பெறும்.

20. செலவ இனம் :—

வருடந்தோறும் நடைபெறும் மஹாசபைக் கூட்டத்திற்கு விஜயம் செய்யும் நிர்வாகஸ்தர், போஷகர், ஆலோசகர் ஆகிய மூன்று பிரிவுகளைச் சேர்ந்த ஸ்தாபனங்களின் தலைவர்களுக்கு மட்டும், அவரவர்கள் இடத்திலிருந்து மஹாசபை நடைபெறும் இடத்துக்குப் போக வர, சாதாரண மூன்ருவது வகுப்பு ரயில் சார்ஜ் மட்டும் கொடுக்கப் பெறும்.

21. பொது விதிகள் :—

(அ) இச் சங்கத்திற்கென நன்கொடை யளிப்பவர்கள், சங்கத்தின் செயலாளரிடம் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) இச் சங்கத்தின் காரியங்களில், குறிப்பிட்ட சில காரியங்களுக்கெனக் கொடுக்கப்பெறும் நன்கொடைகள், அந்தக் காரியங்களுக்கே உபயோகிக்கப் பெறுதல் வேண்டும்.

(இ) மேற் குறித்த காரியங்களுக்காக நிர்வாகக் கவுன்ஸில் விரும்பினால், சங்கத்தின் அங்கத்தினர்களில் தகுதியானவர்களைத் தனிக் கமிட்டியாக நியமித்து, அதற்குரிய விதிகளையும் தீர்மானித்தல் வேண்டும்.

(ஈ) வருடந் தோறும் நடைபெறும் மஹாசபைக் கூட்டத்திற்கு அங்கத்தினர் அனைவரும் தவறாது விஜயம் செய்ய வேண்டும்.

(உ) மேலே கண்ட விதிகளை மாற்றவோ, திருத்தவோ, நீக்கவோ, புதிய விதிகளைச் சேர்க்கவோ, நிர்வாகஸ்தர், போஷகர், ஆலோசகர் ஆகிய மூன்று பிரிவுகளும் சேர்ந்த ஆலோசனைக் கவுன்ஸிலுக்கு உரிமை யுண்டு.

மேலே கண்டவை சாது சங்கத்தின் சட்ட திட்டங்கள் என்றும், அவை சரியான பிரதி என்றும், இதன்மூலம் சர்ட்டிபை செய்கிறோம்.

தலைவர்.

(1) காசிகாநந்த ஞானாசார்ய ஸ்வாமிகள்,
ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்.

செயலாளர்.

(2) இராமநாத ஸ்வாமிகள்,
ஸ்ரீ நடேச ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்.

பொருளாளர்.

(3) வீர சு. ஷண்முகாநந்த ஸ்வாமிகள்,
ஸ்ரீ வீர சுப்பைய ஸ்வாமிகள் மாணுக்கர்,
சந்நியாச ஆச்ரமம்

சாக்ஷி : நாராயண ஸ்வாமி,
குட்டையா மடம், மதுரை. 14-9-'50

C.C.P. Works, Ltd., Madras— 300—11-50.